2011 பிப்ரவரி 9]

அண்மையிலே நம்முடைய தமிழகத்தின் வரலாற்று முதல்வர் ஐயா, கலைஞர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கக்கூடிய தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இருக்கக்கூடிய மீனவ மக்கள் பயன்படுகின்ற வகையிலே, நாட்டுப் படகு மீனர்வகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்குகின்ற திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக, சிறப்பாக மத்திய அரசின் மூலமாக, வர்த்தகரீதியாக ஒரு லிட்டர் மண்ணெண்ணெயை ரூ.43.94 பைசாவிற்குப் பெற்று, இன்றைக்கு மீனவ மக்களினுடைய பயன்பாட்டிற்கு ரூ.25/—க்கு, ஆண்டுக்கு ரூ.80 கோடி மானிய விலையிலே வழங்குகின்ற முதல்வர், நம்முடைய வரலாற்று முதல்வர், ஐயா கலைஞர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கடந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்திலே இருந்த முதலமைச்சர் அவர்கள் இந்த 3 மாவட்ட மீனவர்களுக்கும்—ஒரு தகவலை நான் சொல்வது அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், அவர்கள் கேட்டதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும்.*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.27/—க்கு கொடுத்தவர், கடந்த கால முதலமைச்சர் என்பதனை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

கட்டட வசதி

***113743—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை E.D. *493 புதுவலசு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 9

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கட்டடம் கட்டக்கூடிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னிமலை, புதுவலசு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது என்ற செய்தியைச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பால் கொள்முதல் விலை என்பது மிகப் பெரிய ஒரு பிரச்சினையாகும். பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்பது விவசாயிகளின் மத்தியில் மிகப் பெரிய ஒரு கோரிக்கையாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் ஆதரவோடு பொறுப்பேற்றிருக்கிற தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, விவசாயிகளுடைய வாழ்க்கையிலே பாலை வார்த்திருக்கிறது. நான்கு ஆண்டு காலத்திலே 4 முறை பால் விலையை உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும், இன்றைக்கு இருக்கிற பொருளாதார சூழ்நிலையில், விலைவாசியைக் கருத்திலேகொண்டு, அன்றைக்கு ரூ.2/–க்கு விற்ற தவிடு, இன்று ரூ.9.50–க்கு விற்கிறது. அன்றைக்கு ரூ.4/–க்கு விற்ற தீவனம், இன்று ரூ.12/–க்கு விற்கிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, நேற்றைக்கு போராட்டத்திலே ஈடுப்பட்ட பால் விவசாயிகளுடைய நலனைக் கருத்திலேகொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, அவர்களை மீண்டும் ஒருமுறை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். எனவே, பால் விலையை உயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

2011 பிப்ரவரி 9]

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5–வது முறையாக தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பிறகு, 4 முறை பாலின் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பால் கொள்முதல் விலையைப் பொறுத்தளவில் தமிழ்நாட்டில்தான் அதிகமான விலை கொடுத்து கொள்முதல் செய்யப்படுகிறது. தலைவர் கலைஞர் அவர்கள் போராட்ட உணர்வுகளையும், போராட்டத்தினுடைய கருத்துகளையும் பரிசிலனை செய்துதான், பொது மக்களுடைய நன்மையைக் கருதி, நுகர்வோர்களுடைய நலனைக் கருதி, ஒரு நியாயமான அறிவிப்பினை, 4–வது முறையாகவும் அறிவித்து, இன்றைக்கு பாலுக்கு சரியான விலை கொடுக்கப்படுகிறது. ஒரு ஜனநாயக நாட்டில் போராடுகிறபோது, போராட்டத்திற்கான நல்ல தீர்வு காணுகிறபோது, அந்தப் போராட்டத்திற்கானத் தீர்வினை ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான், போராட்டம் நடத்தக்கூடியவர்களின் கடமையாக இருக்க வேண்டும். ஆக, நியாயமான முறையிலே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், 4 முறை பாலினுடைய விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். பசும் பாலுக்கு 6 ரூபாய் 60 காசும், எருமைப் பாலுக்கு 12 ரூபாய் 70 காசும் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். நான் இந்த அவையின்மூலமாக, தங்கள்மூலமாக, பால் உற்பத்தியாளர்களுக்காகப் போராடக்கூடிய தலைவர்களையும், உற்பத்தியாளர்களையும், சங்கப் பணியாளர்களையும் கேட்டுக்கொள்வது, இந்த நியாயமான ஏற்பாட்டினை ஏற்றுக்கொண்டு, வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, பால் வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 முறை பால் விலை உயர்த்தியதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனாலும், 2 ரூபாய்க்கு விற்ற தவிடு இன்றைக்கு 10 ரூபாய், 4 ரூபாய்க்கு விற்ற தீவனம் 11 ரூபாய் 40 பைசா விற்கின்றன. இன்றைக்கு ஒரு ஏக்கர் தட்டு அறுப்பதற்கு 10 ஆயிரம் ரூபாய், வைக்கோல் போர் போடுவதற்கு 8 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. பக்கத்தில் இருக்கிற பாண்டிச்சேரியிலே, மத்திய அரசினுடைய

[2011 பிப்ரவரி 9

உதவியோடு 3 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது; பக்கத்திலே இருக்கிற கர்நாடகாவிலே 2 ரூபாய் 50 பைசா மானியம் வழங்கப்படுகிறது; பக்கத்திலே இருக்கக்கூடிய கேரளாவிலே பாலுக்கு ஒரு லிட்டருக்கு 3 ரூபாய் 50 பைசா வழங்கப்படுகிறது. எனவே, தனியார் பால் உற்பத்தி நிலையங்களிலிருந்துகூட பாலை வாங்கக்கூடாது என்று அரசுத் துறை சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள் தடை செய்து இருப்பதால், இன்றைக்கு பால் தட்டுப்பாடு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள். கருணைகூர்ந்து எப்படியாவது—தேர்தல் நேரமாக இருக்கிறது, தயவு செய்து இந்த ஒரு முறை—நீங்கள் கடந்த முறை அழைத்துப் பேசினீர்கள். இந்த ஒரு முறை பால் விவசாயிகளை அழைத்துப் பேசி, அவர்கள் மனம் திருப்தி அடையக்கூடிய வகையிலே விளக்கத்தைச் சொல்ல வேண்டும். பால் உற்பத்தியாளர்களை, போராடிக் கொண்டிருக்கிற விவசாயிகளை, மிகவும் வறுமையிலே வாடிக்கொண்டிருக்கிற விவசாயிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு அரசு கண்டிப்பாக அவர்களை அழைத்துப் பேசவேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசியாலும், புண்ணாக்கு, தவிடு விற்கிற விலையினாலும் எல்லாம் பால் உற்பத்தி செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. குடிக்கிற தண்ணீர் ஒரு லிட்டர் 20 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் 15 ரூபாய், 14 ரூபாய்தான் பசும்பாலுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சருடைய கருணை வேண்டும். 4 முறை உயர்த்தி இருக்கிறீர்கள், ஏற்றுக்கொள்கிறேன், நன்றி சொல்கிறேன். தயவுசெய்து மன்றாடிக் கேட்கிறேன், பால் விவசாயிகளை அழைத்து ஒரு முறை பேசுங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். இன்னொரு முறை பேசுங்கள் என்கின்ற ஒரு பணிவான வேண்டுகோளை விடுத்து தனியார் பால் purchase செய்வதை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லிவிட்டீர்கள் இல்லையா? உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர்களைக் கூப்பிட்டுப் பேச வேண்டும். அவ்வளவுதானே? உங்கள் கோரிக்கை அவ்வளவுதானே, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிற்கும், பாண்டிச்சேரிக்கும் பால்

2011 பிப்ரவரி 9]

உற்பத்தியாளர்கள் யாரும் பால் கொடுப்பதில்லை. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தனியார் நிறுவனங்கள் பால் கொள்முதல் செய்து பாண்டிச்சேரிக்கும், கேரளாவிற்கும் கொடுக்கிறார்கள். அதைக்கூட இன்றைக்குத் தடை செய்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். முறைப்படி உரிமம் பெற்றவர்கள், பாலைக் கொள்முதல் செய்கிறபோது அவர்களைத் தடுப்பதில்லை. கொள்முதல் செய்து, அதில் கலப்படம் செய்து வெளியிலே விற்கிறபோது, அதை நாங்கள் தடை செய்கிறோம். இது பால் வளத் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. தனியாருக்கு உரிமம் கொடுக்கிறோம். தனியார் உரிமம்மூலமாக பாலைப் பெறுவதில் தடை இல்லை. உரிமம் பெறாமல், பெறக்கூடியவர்களைத் தடை செய்கிறோம். உரிமம் இல்லாமல் இருப்பவர்கள், உரிமம் உள்ளவர்களிடமிருந்து பெற்று, பாலில் கலப்படம் செய்து மற்ற மாநிலங்களுக்கு அனுப்புகிறபோது அதைத் தடை செய்கிறோம். இதுதான் நடவடிக்கையில் இருக்கிறது. இன்னொன்று, மற்ற மாநிலங்களை ஒப்பிடுகிறபோது இன்றைக்கு உத்தரப்பிரதேசத்திலே 16 ரூபாய் 42 காசுக்கு எடுக்கிறார்கள். ஒரிசாவிலே 16 ரூபாய் 35 காசு, கேரளாவிலே 16 ரூபாய் 7 காசு; குஜராத்திலே 15 ரூபாய் 72 காசு; ஆந்திரப்பிரதேசத்திலே 15 ரூபாய் 42 காசு; மேற்கு வங்கத்திலே 15 ரூபாய் 19 காசு; ஹிமாச்சலப் பிரதேசத்திலே 14 ரூபாய் 23 காசு; மகாராஷ்டிரத்திலே 13 ரூபாய் 50 காசு; தமிழ்நாட்டில் 16 ரூபாய் 64 காசுக்கு பசும்பாலும், 25 ரூபாய் 20 காசுக்கு எருமைப்பாலும் கொள்முதல் செய்கிறோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு மாநிலங்களை ஒப்பிட்டுக் காட்டி, நம்முடைய மாநிலத்தில் கூடுதலாக விலை தரப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். நீங்கள்தான் எல்லா மாநிலங்களுக்கும் முன்னோடி என்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், பால் உற்பத்தியாளர்கள் போராட்டம் 2, 3 நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. 24 ஆயிரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களும் வேலை நிறுத்தத்திலே

தொடர்வதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அப்படி இருக்கின்றபோது பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்கின்ற பால் கிடைக்கவில்லை என்று சொன்னால், நகர்ப்புறங்களில் வாழ்கின்றவர்களுக்கும், அதை வாங்கிச் சாப்பிடுகின்ற ஏழை எளிய மக்களுக்கும், குழந்தைகளுக்கும் பால் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படுமென்ற நிலையில், இதனை மறு பரிசீலனை செய்து உடனடியாக அவர்களை அழைத்துப்பேசி, அவர்கள் என்ன கோரிக்கை வைக்கிறார்களோ அதனை ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய போராட்டத்தை நிறுத்துவதற்கு, அரசு உரிய உடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 2006 ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற ஆட்சிக் காலத்தில், யாரையும் அழைத்துக்கூட பேசாமல் பசும் பாலுக்கு ரூ.1–50-ம், எருமைப்பாலுக்கு ரூ.1–56-ம் என உயர்த்திக் கொடுத்துள்ளார்கள். ஆனால், இன்றைக்கு உற்பத்தியாளர்களை அழைத்துப்பேசி, பால் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். அதேநேரத்தில் இன்றைக்கு 8,000–க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 15,000–க்கும் மேற்பட்ட சங்கப் பணியாளர்களை நிரந்தப்படுத்துவற்கு வாய்ப்புகள் இல்லாத ஒரு சூழ்நிலை சட்டரீதியாக உள்ளது. தலைவர்கள் பொறுப்பிலே இருந்தகாலத்தில் சரியான கல்வித் தகுதி இல்லாமல், Employment Exchangeமூலம் வராமல், cadre strength இல்லாமல், பத்து நபர்கள் தேவை என்றால், பத்து நபர்களை எடுக்கலாம். ஆட்களே தேவையில்லாத சங்கங்களிலே அதிகமான ஆட்களை எடுத்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி backdoor வழியாக வருகின்றவர்கள், backdoor வழியாகத்தான் செல்ல வேண்டுமென்ற தீர்ப்பு இருக்கின்றது. இதுபோன்ற தவறான முறையில் பணிக்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இருந்தபோதிலும்கூட மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக ஆண்டுக்கொரு முறை ஊதியத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.

2011 பிப்ரவரி 9]

இந்த ஆண்டுகூட ரூ.209–லிருந்து ரூ.600/– வரை சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இன்றைக்குக்கூட அதிகாரிகளோடும், செயலாளரோடும் பேசி சங்கப் பணியாளர்களுடைய கோரிக்கைகளை ஏற்றிருக்கிறேன். சட்டரீதியாக அவர்களை, நிரந்தரம் செய்வதற்கு வாய்ப்பு இருக்குமேயானல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த மூன்று, நான்கு நாட்களாக கறவை மாடுகளுடன், விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திற்கு எனக்கு மாற்றுக் கருத்தில்லை. கடந்த காலத்தில் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு தவிடு, புண்ணாக்கு உட்பட விற்பனை online வர்த்தகத்திற்குள் சென்ற காரணத்தினால், அவற்றினுடைய விலைகள் உயர்ந்து கொண்டிருக்கின்றன. பால் online வர்த்தகத்திற்குள் செல்லாத காரணத்தினால், விவசாயிகள் இப்போது பால் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது இருக்கிற நிலைமையில் பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று போராடிக்கொண்டிருக்கும் அந்த விவசாயிகளையும், பால் உற்பத்தியாளர்களையும் மற்றும் இருக்கக்கூடிய ஊழியர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழைத்து, பேச்சு வார்த்தை நடத்த முன் வர வேண்டுமென்பதைத்தான் நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். ஏனென்றால் பால் அத்தியாவசியமான ஓர் உணவுப் பொருளாக இருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்காக, இன்றைக்கு அவர்கள் தமிழகம் முழுவதும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினையை ஜனநாயகரீதியாகப் பேசி, அவர்களுக்கு என்ன செய்ய முடியுமோ அந்த முடிவை எடுத்து, அதனை அவர்களிடம் சொல்ல வேண்டும். அந்த முறையில் பேச்சு வார்த்தைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 பிப்ரவரி 9

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக 5–11–2010 அன்றுதான் பசும்பாலுக்கு ரூ.1–10–ம், எருமைப்பாலுக்கு ரூ.2–20 என உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இருப்பினும்கூட மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் வைக்கக்கூடிய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களிடம் தெரிவித்து, அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் மூலமாக எடுப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சாத்தான்குளம் தொகுதியிலுள்ள, பிடாரியேரி ஊராட்சியில், தோப்புவிளையில் 30 இலட்சம் ரூபாய் செலவில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஏழரை இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் விலையுயர்ந்த பால் குளிரூட்டும் மிஷின்கள் இருக்கின்றன. இதற்கு ஒரு சுற்றுச்சுவர் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரம் இருக்குமேயானால், அதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]